பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 230

செவ்வாய்க்கிழமை
14 ஜூலை 2026

ஆனி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

6 தமிழ்க்கட்சிகளின் ஒன்றிணைவு

# தேர்தல் கூட்டணியல்ல; கொள்கைக் கூட்டணியே!



## மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

புதிய அரசியலமைப்பு உருவாக்கம், மாகாணசபைத் தேர்தல் மற்றும் காணி உரிமை ஆகிய விடயங்களை ஓரணியில் நின்று எதிர்கொள்ளவே ஆறு தமிழ்க் கட்சிகளும் கொள்கைரீதியாக ஒன்றிணைந்துள்ளன – இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

»11

தமிழரின் உரிமைகளுக்காக

# 6 தமிழ்க் கட்சிகள் ஓரணியில் இணைவு

கொழும்பு, ஜூலை 14

தமிழர்களின் பல்வேறு பிரச்சினைகளை ஓரணியில் நின்று வென்றெடுப்பதற்காக தமிழர் தாயகம், மலையகம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு தமிழ்க் கட்சிகள் ஓரணியில் இணைந்து செயற்பட முடிவு செய்துள்ளன. இலங்கை மக்கள் காங்கிர

»10

# பேராசிரியர் ரகுராம் தொடர்பில் அவதூறு பரப்புவதை நிறுத்துக

## நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை!

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறைப் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் தொடர்பில் சமூக வலைத் தளங்களில் அவதூறு

»11

கல்கிசை – காங்கேசன்துறை

# வாரத்தின் ஆறு நாள்கள் ரயில்சேவை இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஜூலை 14

கல்கிசையில் இருந்து காங்கேசன்துறை வரையான கடுகதி ரயில்சேவை வாரத்தில் ஆறு நாள்கள் இடம்பெறும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி புதன் கிழமைகளில் மட்டுமே

»10

இராணுவத்தால் விவசாயம்

# தமிழ் விவசாயிகளின் வாழ்வாதாரம் பறிப்பு!

## வலி.வடக்கு மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளில் விவசாய நடவடிக்கைகளில்

»11

# நாமல் ராஜபக்சவே சக்திமிக்க தலைவர்

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ புகழாரம்



கொழும்பு, ஜூலை 14

இலங்கையில் தற்போதுள்ள அரசியற் தலைவர்களில் மிகவும் சக்திமிக்கவர் என்றால் அது நாமல் ராஜபக்சதான் – இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

»11

# பொறியியல் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போர்

## இ.போ.ச. சேவைகள் வவுனியாவில் முடக்கம்

வவுனியா, ஜூலை 14

வவுனியா சாலையில் பணியாற்றும் பொறியியல் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட காரணத்தால் வவுனியா சாலையின் இ.போ.ச. சேவைகள் நேற்று முடங்கின. மேலதிக நேரக் கொடுப்பனவு

»11

‘நீதியின் ஓலம்’ எனும் பெயரில்

# இனப்படுகொலைக்கு நீதி கோரி ஓகஸ்ட் மத்தியில் யாழில் போர்

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழினப் படுகொலைக்குச் சர்வதேச நீதிகோரும் 'நீதியின் ஓலம் 2' கவனவீர்ப்புப் போராட்டம் ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்று தாயகச் செயலணி அமைப்பு தெரிவித்துள்ளது.

»11

# டெங்கு ஒழிப்புத்திட்டம் கிளிநொச்சியில் மும்முரம்

கிளிநொச்சி, ஜூலை 14

டெங்கு பரவும் அபாயமுள்ள 60 வலயங்களை இலக்குவைத்து கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில்

»11

# காணாமலாக்கப்பட்டோர் விசாரணை இரண்டு வருடத்துக்குள் நிறைவுறும்

## நீதியமைச்சர் ஹர்ஷண உறுதி



கொழும்பு, ஜூலை 14

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் பதிவாகியுள்ள 11 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பில் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் விசாரணைகள் அனைத்தும் நிறைவுறும் இவ்வாறு நீதியமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தேசிய நல்லிணக்கம் என்பது மிக முக்கியமானது.

»11

தமிழரசுக் கட்சிக்குள் முறைகேடு

# சீ.வி.கே.சிவஞானம், சுமந்திரன் உடனடியாகப் பதவி விலகுக!

## காங்கேசன்துறை தொகுதிக் கிளை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 14

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் கடந்த இரண்டு ஆண்டுகளாக இடம்பெற்றதாகக் கூறப்படும் பல்வேறு முறைகேடுகளைக் கருத்திற் கொண்டு கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் மற்றும் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் காங்கேசன்முறை தொகுதிக் கிளை கோரிக்கை விடுத்துள்ளது. இதுதொடர்பில் இலங்கைத்

»11



முச்சந்தி முனி

“பழைய மொந்தைக்குள்ள அதே பழைய கள்ளை விட்டமாதிரி இந்தக் கூட்டணியும் புளிச்ச கூட்டணிதான் கண்டியளோ”

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 13.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4489 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 44 46 63 74 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹஸ ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 13.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1556 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 43 46 52 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 13.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0515 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 1 1 7 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 13.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2595 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 31 37 55 71 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 13.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6247 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 1 3 6 5 9 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 13.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2277 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 15 18 22 82 |
| விசேட எழுத்து | A |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 13.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0363 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 08 18 39 |

கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையம்

# 9 வருட முடக்கநிலை; நேற்று மீளத்திறப்பு!

## 34 கடைகள் வியாபாரிகளிடம் ஒப்படைப்பு!

**கிளிநொச்சி, ஜூலை 14**

**கிளிநொச்சி -அம்பாள்குளம் பகுதியில் சுமார் 150 மில்லியன் ரூபா செலவில் 40 கடைத் தொகுதிகளுடன்பிரமாண்டமாகநிர்மாணிக்கப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையம், நீண்ட கால முடக்கத்துக்குப்பின்னர் நேற்று திங்கட் கிழமை மொத்த வியாபாரிகளின் வர்த்தக நடவடிக் கைகளுக்காக உத்தியோகபூர்வமாகக் கையளிக் கப்பட்டது. கூட்டுறவுப் பிரதியமைச்சர் உபாலி சம ரசிங்க இந்நிகழ்வில் கலந்துகொண்டு 34 கடைக ளுக்கான திறப்புகளை வியாபாரிகளிடம் வழங்கி வைத்தார்.**



கடந்த 2017ஆம் ஆண்டு ஒக் ரோபர் மாதம் 14ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவினால் இந்த விசேட பொருளாதார மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட் டது. ஆயினும் , கடந்த அர சாங்கங்களின் முறையற்ற முகாமைத்துவம் காரணமாக எவ்விதப் பயன்பாடும் இன்றி கைவிடப்பட்ட நிலையில் இந்த மத்திய நிலையம் காணப்பட் டது. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் முடங்கிக் கிடக்கும் பொருளாதார மத்திய நிலையங்களை வினைத்திற னாக இயங்க வைக்கும் கொள் கைத்திட்டத்தது.

அதன் ஒருஅங்கமாகவே கிளி நொச்சி பொருளாதார மத்திய நிலைய வர்த்தகநிலையங்கள் தற்போது வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த விசேட நிகழ்வில் கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதி பர் எஸ். முரளிதரன், கரைச்சிப் பிரதேச செயலாளர் த. முகுந் தன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பா ளர் மருங்கன் மோகன் மற்றும் அரச அதிகாரிகள், வியாபாரி கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நடவடிக்கை மூலம் வடமா காணத்தின் விவசாய உற்பத் திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்புகளும், பிராந்திய பொருளாதாரமும் பெரும் வளர்ச்சியடையும் என வர்த்த கர்கள் வரவேற்புத் தெரிவித் துள்ளனர். (அ-இ)

# அனுபவமற்ற அமைச்சர்களால் விவசாயத்துறை படுவீழ்ச்சி!

## உள்ளூர் விவசாயிகளின் குரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 14

நாட்டின் பொருளாதாரத்துக்கு வலுச்சேர்க்கும் அதே வேளை பாரம்பரிய உணவுக் கலாசாரத்தைப் பாதுகாக் கும் விவசாயத்துறை இன்று படு வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த நிலைமையைத் தொடரவிடாமல் அனுபவமற்ற அமைச்சர்களை உடன் நீக்கி, விவசாயிகளின் பொருளா தாரத்தை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உள்ளூர் விவசாயிகளின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அமைப்பின் தலைவர் தரிந்து ரத்நாயக்க தெரிவிக்கையில், விவசாயத் துறையைப் பற்றிய போதிய அறிவில்லாத நிர்வாகிகளின் குறுகிய நோக்குடைய தீர் மானங்களால், விவசாயப் பொருளாதாரம் இன்று கடு மையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு, மரக்கறி மற்றும் நெற்செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகள், விவசாய அமைச்சர் மற் றும் பிரதியமைச்சரின் தொலைநோக்கற்ற நடவடிக்கைக ளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே விவ சாயத்துறையில் போதிய அறிவு கொண்டவர் என நாங் கள் நம்பும் ஜனாதிபதி உடனடியாக விவசாய அமைச்சைப் பொறுப்பேற்றால், விவசாயிகள் அனைவரும் ஜனாதிபதி யுடன் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளனர். இல் லையெனில் எதிர்காலத்தில் விவசாயிகள் வீதியில் இறங்கிப் போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய சூழ் நிலை உருவாகும்-என்றார். (க-இ)

# சுகவீனப் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 14

சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகா ரிகளை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள புதிய தீர்மானத் துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வனஜீவரா சிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகா ரிகள் நேற்று தங்களது கடமைகளைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்ட னர். வனஜீவராசிகள் திணைக்களத்தின் அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து, நேற்று ஒரே நாளில் ஒட்டுமொத்தமாகச் சுகவீன விடுமுறை யைப் பெற்று இந்தப் போராட்டத்தை முன்னெடுத்ததால் திணைக்களப் பணி கள் ஸ்தம்பித்தன. (அ-இ)

# குதிரைகளுக்கு தொட்டியில் நீர்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

தற்போதைய கடும் வறட்சி மற்றும் வெப்பமான காலநிலையால் பாதிப்புறாமல் இருப்பதற்காக, நெடுந்தீவில் உள்ள குதிரைகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கென அமைக்கப்பட்ட விசேட தொட்டியில் குடிநீர் நிரப்பப்பட்டு குதிரைகள் மற்றும் கால் நடைகளுக்கான தாகத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-4I-25)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 13.07.2026 | திங்கட்கிழமை | 0955 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| S | 4 8 4 7 9 0 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 13.07.2026 | தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3221 | K | 13 36 58 62 | |

| சனிதா | | | |
|---|---|---|---|
| திகதி | 13.07.2026 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் | |
| N | 12 36 73 77 | 5382 | |

| SASIRI | | | |
|---|---|---|---|
| திகதி | 13.07.2026 | தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | | |
| 1051 | 07 20 31 | | |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி | 13.07.2026 | தினம் | திங்கட்கிழமை |
| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் | |
| | 05 07 39 52 | 4933 | |


| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 13.07.2026 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| C | 36 | 29 35 45 66 | 2397 |

| அத கோடிபதி | | | |
|---|---|---|---|
| திகதி | 13.07.2026 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் | |
| X | 06 12 68 69 | 3047 | |


# போதைப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் கைது

கொழும்பு,ஜூலை 14

பேராதனை மற்றும் கொழும்புப் பகுதிகளில் ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள்களுடன் இரண்டு சந்தேகநபர் கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பேராதனை நகருக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்து சோதனை நடத்திய போது, ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 400 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற் றும் 150 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது. அதேவேளை, ஹின் னியப்புஹாமி மாவத்தையில் நடத்திய விசேட சோதனையின் போது, கொழும்பு 13 பகுதியில் 17 வயதுடைய சிறுவன் ஒருவன் கைதுசெய்யப்பட்டுள்ளான். சந்தேகநபரிடமிருந்து 119 கிராம் 680 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வெப்பம் இன்னும் அதிகரிக்கும் உடலில் நீர்ச்சத்தைப் பேணுங்கள்

## சுகாதார அதிகாரிகள் ஆலோசனை

**கொழும்பு,ஜூலை 14**

**நாட்டில் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் அதிகளவான வெப்பமான கால நிலை தொடரும். எனவே பொதுமக்கள் போதியளவு தண்ணீர் அல்லது திரவ உணவுகளை அருந்தி உடலை எப்போதும் நீர்ச்சத்துடன் வைத்திருக்க வேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.**

மனித உடலால் உணரப்படும் வெப்பத்தின் அளவான வெப்பச் சுட்டெண் முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் எச்சரிக்கை மட்டத்தை எட்டக்கூடும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. எனவே சூரிய ஒளியில் நீண்ட நேரம் நேரடியாக வேலை செய்தல், வெளியில் நடமாடுதல் அதிக சோர்வு மற்றும் தசைப்பிடிப்பு போன்ற உபாதைகளை ஏற்படுத்தக்கூடும். எனவே, பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள கடுமையான உடலுழைப்பைக் கோரும் வெளிப்புறச் செயற்பாடுகளைக் குறைத்து, இலகுவான மற்றும் வெள்ளை அல்லது வெளிர்நிற ஆடைகளை அணியவேண்டும். போதியளவு நீர் அருந்த வேண்டும். வீட்டில் உள்ள வயோதிபர்கள் மற்றும் நோயாளிகள் தொடர்பில் அவதானமாக இருப்பதுடன், வாகனங்களில் குழந்தைகளைத் தனியாக விட்டுச் செல்வதையும் தவிர்க்க வேண்டும் என்றும் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (க-இ)

# நீதியமைச்சருக்கு எதிரான பிரேரணை பயனற்றது

## சீலரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 14

நீதியமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை முற்றிலும் பயனற்றது என்று ஜனசெத பெரமுனக் கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்றில் அரசாங்கத்துக்கு 159 உறுப்பினர்களின் பலமுள்ளது. ஜனாதிபதியையும் சேர்த்தால் 160 உறுப்பினர்கள் உள்ளனர். தற்போதைய சூழலில் எதிர்க்கட்சியினரும், ஆளுங்கட்சியினரும் ஒரே கொள்கையுடையவர்களாகவே செயற்படுகின்றனர். எனவே, அவர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை மிக எளிதாகத் தோற்கடித்து, செயலிழக்கச் செய்துவிடுவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தற்போதைய அரசாங்கத்தின் நிர்வாகப் பலவீனம் மற்றும் தளர்வுப் போக்குக் காரணமாகவே, நாட்டின் சிறைச்சாலைகள் இந்த அளவுக்கு மோசமான நிலையை அடைந்துள்ளன என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். அரசியல் ரீதியாகப் பக்குவப்படாத, இன்னும் சிறுபிள்ளைத் தனமாகச் செயற்படும் ஒருவரால், இவ்வாறான பொறுப்பு வாய்ந்த பதவிகளைச் சரியாகக் கையாள முடியாது. வயது முதிர்ந்து, அறிவுப் பக்குவம் ஏற்படும் போதே, ஒருவருக்குச் சிறந்த நிர்வாகத் திறன் கிட்டும். என்றார். (க-இ)

# இலங்கையில் அதிக வயதான மூதாட்டி சாவு

கொழும்பு,ஜூலை 14

இலங்கையில் அதிக வயதான பெண்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்ட, அநுராதபுரம் சங்கிலி கனதராவப் பகுதியைச் சேர்ந்த புஞ்சாகே களுமெனிகே தனது 114 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். 1912ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் திகதி பிறந்த இவர், இந்த ஆண்டின் தொடக்கத்தில் தனது 114ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். எதிர்பாராதவிதமாக வீழ்ந்து காயமடைந்த இவர் சத்திரசிகிச்சைக்குப் பின்னர், சுமார் இரண்டு மாதங்கள் வரை உடல் நலக்குறைவில் இருந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார். இவருக்கு 12 பிள்ளைகள் உள்ளனர். இவரது குடும்ப வம்சாவளியில் கொள்ளுப் பேரக்குழந்தைகள் மற்றும் எள்ளுப் பேரக்குழந்தைகள் உட்பட 325 வாரிசுகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)



# பிறப்பு வீதம் வீழ்ச்சி; முதியோர் அதிகரிப்பு

கொழும்பு,ஜூலை 14

நாட்டில் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், தற்போது குழந்தைகளின் பிறப்புவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. எனினும் முதியோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது ஆபத்தான, பாதுகாப்பற்ற குழந்தைப் பிறப்பு வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக திருமணமாகாத பாடசாலை மாணவிகள், போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவ்வாறு பிறக்கும் குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பிரத்தியேக வேலைத்திட்டம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)




# பிச்சைப் பாத்திரம் ஏந்தி... – I

நெல்லுக்கிறைச்ச தண்ணி புல்லுக்கும் பொசியிறது வழக்கம் தான். ஆனால் நெல்லுமாதிரி வேசம் போட்டுக்கொண்டு புல்லுமட்டும் நிக்கிற வயலுக்குத் தண்ணி விட்டுக்கொண்டே இருந்தால் தண்ணியும் வீண், வயலும் பாழாப் போடும். அதால புல்லுமண்டிக் கிடக்கிற வயலுக்கு ஈவிரக்கம் பாக்காமல், நெருப்பை வைச்சால்தான் களையெல்லாம் அடியோட எரிஞ்சு, அடுத்த முறையாவது வயலில நெல்லுச் செய்யக்கூடிய மாதிரி இருக்கும். எதுக்கு இந்த உவமை, உவமானமெண்டு யோசிப்பியள். யாழ்ப்பாணத்தில கன இடங்களில சுத்திக்கொண்டு திரிஞ்ச யாசகர்மாரை அப்புறப்படுத்திற வேலை இப்ப அறம்புறமா நடந்துகொண்டிருக்கெல்லோ. அப்பிடி யாசகம் எடுக்கிறவையை அப்புறப்படுத்திறது மனிதாபிமானம் இல்லாத வேலை எண்டுதான் எல்லாரும் சொல்லுவம். ஆனால் மனிதாபிமானத்தைக் கேடயமா வைச்சு யாசகம் எடுக்கிறம் எண்ட போர்வையில உவையில கன பேர் செய்யிற வேலையளைக் கேட்டியள் எண்டால் தலை சுத்தும்.

உண்மையில யாழ்ப்பாண ரவுணுக்க யாசகம் எடுக்கிறவையில பெரும்பான்மையான ஆக்கள் வெளிமாவட்டங்களில இருந்து, அதுவும் சிங்கள ஏரியாவில இருந்து வந்தவை. அவையள் தான் கொச்சைத்தமிழில கதைச்சுக் காசு கேப்பினம். அதுவும் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு ஏரியா, ஒவ்வொரு பாணி இருக்கும். சிலர் பஸ்ஸில ஏறி 'நானொரு அநாதை. எனக்கு உழைப்புப் பிழைப்பில்லை, உடம்பில கனக்க வருத்தம். அதைச் சுகப்படுத்த காசு வேணும்' எண்டு கடிதம் எழுதி, அதை லெமனேட் பண்ணி எல்லாருக்கும் குடுத்திட்டு பிறகு காசோட கலெக்ட் பண்ணுவினம். அப்பிடி காசைக் குடுக்காமல் லெமனேட் பண்ணின கடிதத்தை மட்டும் குடுக்கிறவையை முறைச்சுப் பாப்பினம். தூசணத்தால பேசுவினம். திருப்பி ஆரும் கேள்வி கேட்டால் அவைக்கும் பேசிப்போட்டு இறங்கிடுவினம். இன்னொரு குரூப் ரவுணில சனம் கூட வாற இடங்களுக்கு முன்னால சாம்பிராணிப் பெட்டியளோட நிப்பினம். அந்தச் சாம்பிராணியள் அஞ்சு சதத்துக்கும் உதவாதவை. ஆனால் அவையள் கெஞ்சிக் கூத்தாடி, பசி எண்டு வயித்தைத் தடவிக்காட்டி, பச்சைப் பிள்ளையளைக் காட்டி அந்தச் சாம்பிராணியளை எங்கட தலையில கட்டிப்போடுவினம். இன்னும் சிலர் பிஞ்சுக்குழந்தையளைத் தோளில போட்டுக்கொண்டு உந்த பத்தியெரியிற வெயிலுக்க வந்து, கொஞ்சம் எடுப்புத்தொடுப்பா பணக்காரர் எண்டு தெரியிறவையிட்ட காசு கேப்பினம்.

மேலோட்டமா அவையைப் பாத்தால் பாவமாத்தான் கிடக்கும். ஆனால் அவையெல்லாம் ஒரு மாபியாத்தனத்தோட யாசகம் எடுக்கினம் எண்டது ஆருக்குத் தெரியும். அதிலையும் பரிதாபம் வரப்பண்ணுறதுக்காக குழந்தையளை அடிச்சு, நுள்ளி அழப்பண்ணுவினம், சில குழந்தையளை இரவலா வாங்கிக் கொண்டும் வருவினம். அதுக்கு குழந்தையின்ர உண்மையான தாய் தகப்பனுக்கு வாடகைக் காசு குடுப்பினம். அப்பிடி வாடகைக்கு எடுத்துக்கொண்டு வாற குழந்தையள் புது ஆக்கள் தங்களைத் தூக்கிக்கொண்டு போகேக்க, தாய் தகப்பனைத்தேடி அழாமல் இருக்க, நித்திரைக் குளிசையளை அந்தக் குழந்தையளுக்கு குடுப்பினமாம். அதால பிள்ளையள் கனநேரமா ஆட்டம் அசைவில்லாம அப்பிடியே அவையின்ர தோளில படுத்திருக்கும். அந்தக் குழந்தையளைத்தான் கொளுத்திற வெயிலுக்குள்ள போட்டு வைச்சுக்கொண்டு யாசகம் கேப்பினம். குழந்தை குளிசையின்ர தாக்கத்தில அப்பிடியே படுத்திருக்கும். பாக்கிறவையும் பச்சைப்பிள்ளைக்காக பரிதாபப்பட்டு காசைப் போட்டிட்டு போவினம். இது கூடப் பரவாயில்லை. ஆனால் இதுக்கும் மேலால அவை செய்யிற கூத்துகள் தான் சனத்தைக் கடுப்பேத்தும். அதுகளைப் பற்றி நாளைக்குப் பாப்பம்.

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இணுவில் கந்தனுக்கு தேர்!

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்தர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (சு-25)

# டெங்கில் இருந்து தப்ப பாதுகாப்பு ஆடை அணிக!

மாணவர்களுக்கு அமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 14

நாட்டில் டெங்குத் தொற்றின் தாக்கம் தீவிரமடைந்துள்ள நிலையில், முன்பள்ளி மற்றும் பாடசாலைகளுக்குச் செல்லும் குழந்தைகள் கைகள் மற்றும் கால்களை முழுமையாக மறைக்கும் பாதுகாப்பு ஆடைகளை அணிவதை பெற்றோர் உறுதி செய்ய வேண்டும் என சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், 'குழந்தைகளுக்குப் பாதுகாப்பான நுளம்பு விரட்டிகளைப் பாடசாலைகளில் பயன்படுத்தவேண்டும். கல்வி நிறுவனங்களில் டெங்கு அபாயம் அதிகமாகக் காணப்படுவதால், எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் ஆபத்தானவை. எனவே பெற்றோர் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்' -என்றார். (அ.இ)

## நீர்கொழும்புச் சிறைக்கைதிகளிடம்

# இனிமேல் ஒன்லைனில் வழக்குவிசாரணை!

கொழும்பு, ஜூலை 14

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட வன்முறையின் பின்னர், அங்கிருந்து ஏனைய சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட கைதிகளிடம் 'ஸூம்' செயலி மூலம் ஒன்லைனில் நீதிமன்ற விசாரணைகளை நடத்த சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நீதிமன்றங்களின் தேவைக்கேற்ப இந்த ஒன்லைன் விசாரணைகளை முன்னெடுப்பதற்குத் தேவையான அனுமதியையும் உத்தரவுகளையும் வழங்குமாறு உரிய நீதிமன்றங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் ஆணையாளருமான ஏ. சி. கஜநாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை, நீர்கொழும்புச் சிறைச்சாலையில் இன்னும் எஞ்சியிருக்கும் சுமார் 600 கைதிகளையும் மிக விரைவில் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ.இ)


# சிறுபோக நெற்கொள்வனவு நேற்றுமுதல் ஆரம்பம்!



கொழும்பு, ஜூலை 14

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதும் சிறுபோக நெற்கொள்வனவு நடவடிக்கைகள் நேற்று முதல் அதிகாரபூர்வமாகத் தொடங்கியுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்துள்ளார்.

தற்போது அறுவடை ஆரம்பமாகியுள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முதற்கட்டமாக 143 களஞ்சியசாலைகள் ஊடாக இந்த நெற் கொள்வனவு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்படி, ஒரு கிலோ நாட்டு நெல் 120 ரூபாவுக்கும், சம்பா நெல் 130 ரூபாவுக்கும், கீரிச் சம்பா நெல் 140 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதற்காக அரசாங்கம் 6,000 மில்லியன் ரூபா நிதியை நேரடியாக வழங்கியுள்ளதுடன், மேலதிகமாக 10,000 மில்லியன் ரூபா கடனுதவியும் ஒதுக்கியுள்ளது 'என்றும் அவர் தெரிவித்தார். (அ.இ)



# அலங்கார உற்சவம்

சண்டிலிப்பாய் கல்வளை ஸ்ரீகாளிஅம்பாள் ஆலயத்தின் பாரபவ வருட அலங்கார உற்சவத்தின் முதலாம் நாள் பூசை வழிபாடுகள் கடந்த வெள்ளிக்கிழமை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றன. (அ)

# காலாவதியான நிலையில் திறைசேரி மின்னஞ்சல்!

## நிதிக்குழுவில் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜூலை14

இலங்கைத் திறைசேரியின் மின்னஞ்சல் கட்டமைப்பு கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் எவ்விதப் புதுப்பித்தலுமின்றி காலாவதியான நிலையில் இருப்பது அரசாங்க நிதி பற்றிய குழுவில் அம்பலமாகியுள்ளது. திறைசேரி வெளிநாட்டுக் கடனுக்காகச் செலுத்திய 2.5 மில்லியன் அமெரிக்க டொலர், வேறொரு மூன்றாம் தரப்பு சைபர் குற்றவாளிகளின் கைக்குச் சென்ற இணைய மோசடி குறித்து ஆராய்ந்த போதே இந்த அதிர்ச்சித் தகவல் வெளியானது. இந்தக்குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா, இந்த இணையக் குற்ற மோசடி தொடர்பான விரிவான அறிக்கை மற்றும் எதிர்காலப் பாதுகாப்புப்பரிந்துரைகளைநாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ.இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்காலத்துக்குப் பயன் தரும் வகையில் முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். குடும்பத்தினர் உங்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பார்கள்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் உறவினர்கள் மூலம் கிடைக்கும் செய்தி அளவற்ற மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**துலாம்:** திடீர்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவி செய்வார்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** சகோதரர்களால் சில சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குத் தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பண இலாபம் உண்டாகும். கடன்களில்ஒருபகுதியைச்செலுத்தி முடிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# நெரிபடும் இலங்கை!

உலக அரங்கில் இலங்கை பல்வேறு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்காகப் பேசப்பட்ட காலங்கள் மாறி, தற்போது 'போக்குவரத்து நெரிசல்' என்ற பட்டியலில் உலக அளவில் மூன்றாவது இடத்தையும், ஆசியப் பிராந்திய அளவில் முதலிடத்தையும் பிடித்து மிக மோசமான சாதனைப் பதிவைச் செய்திருப்பது ஒட்டுமொத்த நாட்டுக்குமே விடுக்கப்பட்டுள்ள அபாயச் சங்காகும். பயணத்துக்காக வீதியில் வீணடிக்கப்படும் நேரம், அதன் மூலம் விரயமாகும் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான எரிபொருள், நெரிசலால் வாகன ஓட்டிகளுக்கு ஏற்படும் கடுமையான மன உளைச்சல், சூழலை மாசுபடுத்தும் காபனீரொட்சைட் வெளியேற்றம் மற்றும் போக்குவரத்து நிர்வாகத்தின் திறமையின்மை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. உலகளவில் நைஜீரியா, கோஸ்டாரிகா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இலங்கை இந்த அவலப் பட்டியலை அலங்கரிக்கும் வேளையில், எஸ்தோனியா, ஒஸ்திரியா, பின்லாந்து போன்ற நாடுகள் மிகக் குறைந்த நெரிசலுடன் அமைதியான போக்குவரத்துத் தரத்தைப் பேணி நமக்குச் சாட்டையடி கொடுத்துள்ளன.

இந்த மோசமான நெரிசல் நிலைமை வெறுமனே வீதிகளில் ஏற்படும் வாகன நெரிசல் மட்டுமல்ல; அது எமது நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும், மனித வளத்தின் ஆரோக்கியத்தையும் நிமிர முடியாதளவுக்கு நசுக்கிவிடும் ஒரு பெரும் முடக்கல் காரணியாகும். அதிகாலை வேளையில் அலுவலகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் புறப்படும் மக்கள், தங்களின் ஆகக்கூடுதலான உற்பத்தித் திறனுள்ள நேரத்தை வீதிகளிலேயே பறிகொடுத்து விடுகின்றனர். இதனால் ஏற்படும் வேலை நேர இழப்பு நாட்டின் தேசிய உற்பத்தித்திறனை நேரடியாகப் பாதிக்கின்றது. அதுமட்டுமன்றி, வாகனங்கள் ஒரே இடத்தில் தேங்கி நின்று புகையைக் கக்குவதால் ஏற்படும் சூழல் மாசடைவு, சுவாச நோய்களையும், இதயம் சார்ந்த சுகாதாரப் பிரச்சினைகளையும் பன்மடங்கு அதிகரிக்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக, தினசரி வீதிகளில் அனுபவிக்கும் மன உளைச்சல் எமது சமூகத்தின் நிம்மதியைப் பறித்து, வீதி வன்முறைகளுக்கும் விபத்துகளுக்கும் வழிவகுக்கின்றது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இத்தகைய ஆபத்தான நிலையை உடனடியாகக் கட்டுப்படுத்தத் தவறினால், எமது எதிர்காலப் போக்குவரத்து மற்றும் நகரக் கட்டமைப்பு என்பது முற்றிலும் சீர்குலைந்து போகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. போக்குவரத்து நிர்வாகத்தின் திறமையின்மையைச் சுட்டிக்காட்டும் இந்தத் தரவுகள், எமது தற்போதைய திசைகாட்டி அரசாங்கத்துக்கும், போக்குவரத்துத் திணைக்களத்துக்கும் விடுக்கப்பட்டுள்ள அவசர அழைப்பாகும். இனியாவது பழமையான போக்குவரத்து மேலாண்மை முறைகளைத் தூக்கியெறிந்துவிட்டு, நவீன தொழில்நுட்ப முறைகளைப் புகுத்த அரசு முன்வரவேண்டும். வீதிச் சமிக்ஞைகளை நவீனமயப்படுத்துவது, அவசரப் பயணங்களுக்கான பொதுப் போக்குவரத்துச் சேவைகளை உலகத்தரத்துக்கு உயர்த்தி மக்களைப் பயன்படுத்தத் தூண்டுவது மற்றும் நெரிசல் மிகுந்த நேரங்களில் கனரக வாகனங்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது போன்ற காத்திரமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.


நெரிசலற்ற அமைதியான போக்குவரத்து என்பது ஆடம்பரமல்ல, அது ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கான அடிப்படை அளவுகோலாகும். எஸ்தோனியா போன்ற நாடுகள் எப்படித் தங்களின் டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் முறையான திட்டமிடல் மூலம் அமைதியான போக்குவரத்தைச் சாத்தியமாக்கியுள்ளன என்பதைப் பார்த்து நாமும் பாடம் கற்க வேண்டும். 'வேகமாகச் செல்வது முக்கியமல்ல, பாதுகாப்பாகவும் சீராகவும் பயணிப்பதே உன்னதமானது' என்பதை வாகனச் சாரதிகளும், முறையான வீதிக் கட்டமைப்பை உருவாக்குவது தங்களின் தலையாய கடமை என்பதைப் போக்குவரத்துப் பிரிவினரும் உணர்ந்து செயற்பட வேண்டும். இந்த நச்சு நெரிசலில் இருந்து எமது வீதிகளை மீட்டெடுக்க அரசாங்கமும் பொதுமக்களும் கைகோர்த்து விழிப்படைய வேண்டிய தருணமிது!



## பொய்யாமொழி

**படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்**

**பொருள்:** நடுவுநிலைமை அல்லாதவற்றைக் கண்டு நாணி ஒதுங்குகின்றவர், பிறர் பொருளைக் கவர்வதால் வரும் பயனை விரும்பிப் பழியான செயல்களைச் செய்யார்.






நெருக்கடியைத் தவிர்க்க

# விளக்கமறியலை நீக்க வேண்டும்!

அத்தநாயக்க 'அட்வைஸ்'

கொழும்பு,ஜூலை 14

**அவசியமற்ற முறையில் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்கும் நடைமுறையைத் தவிர்த்து, அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நேரடியாக நீதிமன்றத்தின் ஊடாக விசாரணை செய்வதன் மூலம் சிறைச்சாலைகளின் நெருக்கடியைத் தவிர்க்க முடியும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறைச்சாலைகளில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான நெருக்கடி நிலைமைக்கு, ஒவ்வொரு சந்தேகநபரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாரும், சட்டமா அதிபர் பிரிவும் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுப்பதே பிரதான காரணமாகும். சிறைப்படுத்தாமல் வெளியில் வைத்து விசாரணை செய்யக்கூடிய வழக்குகளும் இருக்கின்றன. குற்றத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டு, சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்காமல், வெளியில் வைத்திருந்தே அவ்வாறான வழக்குகளை விசாரணை செய்ய முடியும். எனினும், துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டில் சந்தேகநபர் ஒருவருக்கு வழங்கப்படும் முதல் தண்டனை விளக்கமறியலில் அடைப்பதன் ஊடாக, சிறைப்படுத்துவதே ஆகும். பொலிஸார் தொடர்ச்சியாக ஒவ்வொரு சந்தேகநபரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கோருகின்றனர். இதன் காரணமாக சிறைச்சாலைகள் அனைத்தும் கொள்ளளவுக்கு அதிகமாக நிறைந்துள்ளன.

கைதிகளைப் பராமரிப்பதற்காக அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவுகளும் பெருமளவில் அதிகரித்துள்ளன.

எனவே, இந்தப் பிரச்சினைக்கு முறையானதொரு தீர்வாக, அவசியமற்ற முறையில் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்கும் நடைமுறையைத் தவிர்த்து, அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நேரடியாக நீதிமன்றத்தின் ஊடாக விசாரணை செய்வது அவசியம்- என்றார். (க-இ)

## களுத்துறை கச்சேரியில் தீ விபத்து


களுத்துறை,ஜூலை 14

களுத்துறை மாவட்டச் செயலகத்தின் தரைத்தளத்தில் அமைந்துள்ள மின்சாரக் கட்டமைப்பில் நேற்றுக்காலை தீவிபத்து ஏற்பட்டுள்ளது. களுத்துறை மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் உடனடியாக தீயணைப்பு வாகனங்களுடன் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். விபத்தில் அங்கிருந்த உபகரணங்கள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## விமலின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 14

கடந்த 2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலக வீதியை மறித்துப் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த வழக்கில், முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 6 பேருக்கு எதிரான விசாரணை செப்ரெம்பர் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ்.போதரகம முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, விமல் வீரவன்ஸ உடல்நலக்குறைவால் நீதிமன்றில் ஆஜராகவில்லை. அவர் சார்பான மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து, நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (அ-இ)



## கைத்துப்பாக்கியுடன் இளைஞர் கைது!

கொழும்பு, ஜூலை 14

மகரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புகையிரத வீதிப் பகுதியில், சட்டவிரோதமான முறையில் கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் மேல் மாகாண தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அதிரடியாகக் கைதுசெய்யப்பட்டுள்ளார். புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்புத் தேடுதலின் போதே இந்தச் சந்தேகநபர் துப்பாக்கியுடன் சிக்கியுள்ளார். இச்சம்பவம் குறித்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். (அ-இ)



நாளை
புதன்கிழமை-ஆனி 31
15.07.2026
சுபநேரம் : 04.30 – 06.00
ராகுகாலம் : 12.00 – 01.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# INVITATION FOR BID 2026-02
## ZONAL EDUCATION OFFICE -THENMARADCHY

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Zonal Education Office – Thenmaradchy , Hensman Road Chavakachcheri, now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the below table.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB). All Works Shall be funded with PSDG.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from 14/07/2026 To 28/07/2026 in between 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Zonal Director of Education, Zonal Education Office – Thenmaradchy, Hensman Road, Chavakachcheri. (T.P:0212270786, Fax:0212270013), email:zeothenfinance@gmail.com) from 09:00 hrs to 15:00 hrs. during the period from 14/07/2026 To 28/07/2026 upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurment committee , Zonal Director of Education, Zonal Education Office – Thenmaradchy, Hensman Road Chavakachcheri. on or before 14:00PM at 30/07/2026. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Zonal Education Office – Thenmaradchy, Hensman Road Chavakachcheri commencing at 10:30:00 AM on 21/07/2026.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | from 14/07/2026 To 28/07/2026 |
| | Pre-Bid Conference | At 21/07/2026AM on 10:30:00 AM |
| | Closing and Opening of Bids | At 30/07/2026 PM on 14:00:00 PM |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/41/20/05/03/PSDG/2026/01 | Providing field event facilities and repairing Existing building use To dress Changing Rooms for Girls at J/Madduvil Chandrapuram Skandavaroodaya Vidyalayam | 2.64 | 84 | C9, C8 & C7 Buildings | 2,000.00 | 27000.00 | 15/10/2026 | 17/09/2026 |

Chairman
Regional Procurement Committee ,
Zonal Education Office – Thenmaradchy,
Hensman Road Chavakachcheri.

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## பெறுகை அறிவித்தல்
### 2026ம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு/ வெளிக்கள வேலை சேவை, பாதுகாப்பு, சாரதி, சேவைகளுக்கான விலை மனுக் கோரல்

தலைவர். பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2026 ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்பு/ வெளிக்கள வேலை சேவை. பாதுகாப்பு சேவை. சாரதி சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்கு நர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவையும் நாளாந்த பணிக்காலமும் | தேவையான ஆளணி எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | கேள்வி பிணை வைப்பு | கேள்வி பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை (09 மணி.) | 04 | 365 நாட்கள் | 49,000.00 | 13.10.2026 |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு/ வெளிக்கள வேலை சேவை (08 மணி.) | 25 | 365 நாட்கள் | 283,000.00 | 13.10.2026 |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை (12 மணி.) | 04 | 365 நாட்கள் | 46,000.00 | 13.10.2026 |

1. சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு. பாதுகாப்பு. சாரதி. சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை. சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 14.07.2026 தொடக்கம் 27.07.2026 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.3.500.00 ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. பெறுகை ஆவணங்கள் **28.07.2026 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு **"தலைவர் , பெறுகைக்குழு. வலிகாமம் தெற்கு பிரதேசசபை. சுன்னாகம்".** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் / கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.


**தி. பிரகாஷ்.**
**தலைவர்,**
**பெறுகைக்குழு.**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.** 2026.07.14.

(G/046) J-1



# வலி.வடக்கில் எல்லைகளை வரையறுக்க முகப்புச்சுவர்கள் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 14
வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் எல்லைகளை வரையறை செய்யும்வகையில், இரு வேறு இடங்களில் வரவேற்பு முகப்புச்சுவர்கள் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டுள்ளன. சபை நிதி மூலம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பலாலி வீதியிலும், ஈவினைக் கிராம அலுவலர் பிரிவில் சுன்னாகம்-புத்தூர் வீதியிலும் புதிதாக அமைக்கப்பட்ட சுவர்கள் இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன.
நிகழ்வில் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தி.பிரகாஷ், முன்னாள் தவிசாளர் க.தர்சன், வலிகாமம் தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் இ.லகிந்தன் மற்றும் நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர். (க-66)



குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் வேட்டைத் திருவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. தொடர்ந்து பொம்மலாட்டம், மயிலாட்டம் போன்ற பாரம்பரியக் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-66)

# கந்தபுராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 14
நீர்வேலி கந்தசுவாமி ஆலயம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடரின் 61 ஆவது சொற்பொழிவு எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நடைபெறும். இதில் சொற்பெருவேந்தர் க. கயிலைவாசன் "அசமுகி சோகப் படலம் " என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவை ஆற்றுவார். தொடர்ந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு, பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (க)


## பெயர்மாற்றம்

மணற்புலம், அளவெட்டி கிழக்கு, அளவெட்டியில் வசிக்கும் **பசுபதி மோகனராஜ்** ஆகிய நான் எனது பெயரை **பசுபதி மகிந்தன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பசுபதி மகிந்தன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(CS/32150) J-1 **பசுபதி மகிந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதைபந்தாட்டப் போட்டியில் சென்.மேரிஸ் வி.க.வெற்றி



யாழ்ப்பாணம், ஜூலை 14

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாவது போட்டியில், கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து, நாகர்கோவில் நாகதீபம் விளையாட்டுக் கழகம் மோதியது. இந்தப் போட்டியில் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. தொடர்ந்து நடைபெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழக வீரர் சதீஸ் தெரிவுசெய்யப்பட்டார். (சு)

## Invitation for Bids (IFB)
## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA
## Rural Roads Development Project (RRDP) & Rural Bridges Development Project (RBDP) -2026

(1) The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vengalacheddikulam Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) listed in the table below.

| S. No | Bid No. | Source of Fund | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period | Non-refundable amount |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity Period | | |
| 1 | NP/VAV/VCKPS/RBDP/2026/02 | RBDP | Construction of Thigilangkulam small bridge . | 7.87 | C8, C7 & C6 (highway) | 79,000.00 | 10.11.2026 | 98 | 3500.00 |
| 2 | NP/VAV/VCKPS/RRDP/2026/01 | RRDP | Construction of Kanthinagar 5th cross street – NVVPE019<br>Construction of Kakkarankulam School aruhu road – NVVPE225 | 5.83 | C8, C7 & C6 (highway) | 59,000.00 | 10.11.2026 | 98 | 3,500.00 |
| 3 | NP/VAV/VCKPS/RRDP/2026/02 | RRDP | Construction of Kallimurippu road – NVVPE019 | 7.57 | C8, C7 & C6 (highway) | 76,000.00 | 10.11.2026 | 98 | 3,500.00 |
| 4 | NP/VAV/VCKPS/RRDP/2026/03 | RRDP | Construction of Pavatkulam unit 2 internal road 2 – NVVPE067 | 5.81 | C8, C7 & C6 (highway) | 59,000.00 | 10.11.2026 | 98 | 3,500.00 |
| 5 | NP/VAV/VCKPS/RRDP/2026/04 | RRDP | Construction of Kankankulam 4th cross street – NVVPE268 | 5.85 | C8, C7 & C6 (highway) | 59,000.00 | 10.11.2026 | 98 | 3,500.00 |
| 6 | NP/VAV/VCKPS/RRDP/2026/05 | RRDP | Construction of Varikkuddiyoor internal road – NVVPE056 | 14.19 | C7, C6 & C5 (highway) | 142,000.00 | 10.11.2026 | 98 | 5,000.00 |

(2) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

(3) Interested eligible bidders may obtain further information from **Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road [Email: cheddips@gmail.com]** from **09.00 Hrs to 15.00 Hrs** and inspect the bidding documents at the address **Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road, Cheddikulam** .

(4) Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the **"Schedule/Bidding Data"** of the Procurement Document for works.

(5) A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar Madawachchi Road Cheddikulam. from 14.07.2026 until 27.07.2026 from 09.00 Hrs to 15.00 Hrs. Upon payment of the non-refundable fee specified in the table above. The method of payment will be by cash.

(6) Bids must be delivered to the address Chairman, Divisional Procurement Committee, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar-Madawachchi Road, Cheddikulam on or before 28 th July 2026 and 14.00 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.

(7) All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.

(8) The pre-bid meeting will be held on **21.07.2026 at 14.00 Hrs** at the Vengalacheddikulam Pradeshiya Sabha,
Mannar- Madawachchi Road, Cheddikulam.

The address (es) referred to above is (are):

Chairman,
Divisional Procurement Committee.
Vengala cheddikulam Pradeshiya Sabha,
Mannar- Madawachchi Road, Cheddikulam
[Telephone No: **024 2260914** Fax No: **024 2260913**]

**14.07.2026**

(N-1)





# கிர்கிஸ்தான் பயணிக்கும் யாழ்.மாவட்ட மாணவிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

கிர்கிஸ்தான் நாட்டில் நடைபெறவுள்ள உலகமட்ட வலுதூக்கல் போட்டிக்கு, யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 4 மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். உலக வலுதூக்கல் போட்டிக்கான தெரிவு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் யாழ். சென் சாள்ஸ் மகாவித்தியாலய மாணவிகள் இ.கவனி, ஜெ. எனிட்ரோஸ், சென்.சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவி ஜெ. ஜெகனிகா, மற்றும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி சாதனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (சு-422)

# கருத்தரங்கு

கொடிகாமம், ஜூலை 14

வரணி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்தாம் தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து நண்பகல் ஒரு மணிவரை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் கனடா பழைய மாணவர் கு.பாலச்சந்திரன் அனுசரணையுடன் இடம் பெறவுள்ளது.

இந்த கருத்தமர்வில் வளவாளர்களாக வரணி ஆசிரிய வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் திருமதி ம.சிவநேசன் குடமியன் அ.த.க. பாடசாலை அதிபர் செ.மதனரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-159)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கொழும்பு, கிளிநொச்சி, பருத்தித்துறை மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

குறிப்பு: கிளிநொச்சி, வவுனியா பிரதேசங்களுக்கு உடனடியாக வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)

தொடர்பு:077 386 6250

(CS/61870) J-1

## மு/ மல்லாவி மத்திய கல்லூரி
## பழைய மாணவர் (தாய்ச்) சங்க பொதுக்கூட்டம்

மு/ மல்லாவி மத்திய கல்லூரியின் பழைய மாணவர்(தாய்ச்) சங்க பொதுக் கூட்டம் 2026.07.26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு அனைத்துப்பழைய மாணவர் (தாய்ச்) சங்க அங்கத்தவர்களும் தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

காலம் :- 2026.07.26 ஞாயிற்றுக்கிழமை

இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்

நேரம் :- காலை 10.00 மணி

**தலைவர் (அதிபர்),**
**பழைய மாணவர் தாய்சங்கம்**
**மு/ மல்லாவி மத்திய கல்லூரி, (தேசிய பாடசாலை)**
**யோகபுரம்.**

CS/61871) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேல் அனுப்பும் பயணப்பூசை

யாழ்ப்பாணம்,ஜூலை 14
வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து, கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்கு வேல் அனுப்பும் நீண்டகாலப் பாரம்பரியம் மிக்க பயணப்பூசை நாளை புதன்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆரம்பமாகும். கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-66)



# தலைவர் கிண்ணத்தை வென்றது கொலின்ஸ்

யாழ்ப்பாணம்,ஜூலை 14
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட தலைவர் கிண்ணம் உதைபந்துத் தொடரின் இறுதிப்போட்டியில் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி, கொலின்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது. க.சொக்கன் ஞாபகார்த்தமாக, அபிராமி இரும்பகத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய தலைவர் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி இடம்பெற்றது. இதில் வடமராட்சியில் உள்ள 8 அணிகள் பங்கேற்றிருந்தன. லீக் சுற்று முடிவில் கொலின்ஸ், ஐக்கிய வி.கழகம், றேஞ்சர்ஸ், வல்வை அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறி இருந்தன. அரை இறுதிப்போட்டிகளில் கொலின்ஸ் மற்றும் ஐக்கிய வி.கழக அணிகள் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறின. நேற்றுமுன்தினம் இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. இறுதிப்போட்டியில் கொலின்ஸ்-ஐக்கிய விளையாட்டுக்கழக அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இறுதியில் 2 : 0 என்ற கோல் கணக்கில் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி, தலைவர் கிண்ணத்தை வென்றது கொலின்ஸ் அணி. தலைவர் கிண்ணத் தொடரின் அனுசரணையாளர் அபிராமி இரும்பக உரிமையாளர் இராஜேஸ் கொலின்ஸ் அணிக்கு சம்பியன் கிண்ணத்தை வழங்கினார். மூன்றாவது இடத்தை வல்வை அணி பெற்றுக்கொண்டது. தொடரின் சிறந்த இலக்குக் காப்பாளருக்கான விருது கொலின்ஸ் அணியின் இலக்குக் காப்பாளருக்கும், சிறந்த பின்கள வீரருக்கான விருது ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் கிட்டுவுக்கும், தொடர் நாயகன் விருது கொலின்ஸ் அணியின் அகிலதீபனுக்கும் வழங்கப்பட்டது. மூன்று அணி வீரர்களும் பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டனர். (க-100)


## INVITATION FOR BIDS 2026/04
## MARITIMEPATTU - PRADESHIYA SABHA

01. The **Chairman,** Divisional Procurement Committee on behalf of the Chairman, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu. invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.

02. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of **building and road construction** for grade mentioned in the table below.

**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million," The certificate of registration (PCA 03) shall be submitted with the bid"**

04. To be eligible for good contract award the Successful bidder shall not have been Blacklisted by any other acceptable Institution

05. Bidders Shall be a Srilankan citizen or private entity who may have a valid business Registration / Company registration and valid registration certificate issued by respective Authority for the supply of respective Items. Bidders should have in the relevant field in Srilanka as required in the bidding documents.

06. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.

07. Interested bidders may obtain further information from address given below in 8 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **Document Issuing/Purchasing Period** | | | **From 14.07.2026 until 27.07.2026** | | | | | |
| | | **Pre-Bid Conference** | | | **At 10.30 A.M on 21.07.2026** | | | | | |
| | | **Closing and Opening of Bids** | | | **At 10.30 A.M on 28.07.2026** | | | | | |
| **S/No** | **Bid ID** | **Description of Work** | **Source of Fund** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Required CIDA Grade & Speciality** | **Non-Refundable Fee (Rs.)** | **Bid Validity Period upto** | **Required Bid Security** | |
| | | | | | | | | | **Amount (Rs.)** | **Validity Period** |
| 01 | RE.BU IN SL / NP/MU/MPPS/2026 /01 | Reconstruction of Karachchikudiyiruppu Main Road - Maritimepattu Pradeshiya Sabha | RE-Building in Sri Lanka - 1,250 Mn | 14.21 | 98 Days | C7, C6 and C5 (Highway) | 7500.00 | 02-Nov-2026 | 214,000.00 | 30-Nov-2026 |
| 02 | SD/NP/MU/MPPS/ 2026/01 | Landscaping Works for Front of LDSP Shop at Mullaitivu Town | SD | 2.72 Mn | 63 Days | C9or Above (Highway) | 2500.00 | 28-Sep-2026 | 41, 000.00 | 26-Oct-2026 |

08. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Maritimepattu - Pradeshiya Sabha, Kovilkudiyiru ppu, Mullaitivu (T.P:0212290001, email: pskpattu@gmail.com)from **9:00 hrs to 15:00 hrs during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.

09. Bids (Original & Duplicate) must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu **on or before 10.30 A.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu.

10. Pre-Bid Conference will be held at Conference Hall, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu **commencing at 10.30 AM as stated in table above.**

11. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Maritimepattu Pradeshiya Sabha,
Kovilkudiyiruppu, Mullaitivu.
14.07.2026




# துர்க்காதேவி ஆலய வளாகத்தில் அன்னசத்திர மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 14
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வளாகத்தில், புதிதாக அமைக்கப்பட்ட அன்னசத்திர மண்டபம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது. ஆலயத்தின் பிரதமகுரு சு.செந்தில்ராஜக் குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து செந்தமிழ்ச்சுடர் கி.சிவகுமார் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து மாணவர் களின் பல்வேறு கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கி.சிவகுமார், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ச.சிவஸ்ரீ, வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை மற்றும் கல்வியியலாளர்கள் கலந்துகொண்டனர். (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈரான்–அமெரிக்கா போர்; இருதரப்பும் மூர்க்கத் தாக்குதல்!



## கச்சா எண்ணெய் விலையும் உயர்வு

வொஷிங்டன், ஜூலை 14

**அமெரிக்க இராணுவம் இரண்டாவது நாளாக நடத்திய தொடர் வான்வழித் தாக்குதல்களில், ஈரானின் முக்கியமான பல இராணுவ இலக்குகள் துல்லியமாகத் தாக்கி அழிக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

இதற்குப் பதிலடியாக, அந்தப் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவ முகாம்களை இலக்குவைத்துத் தங்களது படைகள் புதிய அலைத் தாக்குதல்களைத் தொடுத்துள்ளதாக ஈரானிய அரச ஊடகங்கள் அறிவித்துள்ளன. அமெரிக்கா-ஈரான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையேயான மோதல்களால் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகளும் பெரும் பதற்றத்துக்குள்ளாகியுள்ளன. பஹ்ரைனில் அபாய எச்சரிக்கை ஒலிகள் எழுப்பப்பட்டுள்ளதுடன், குவைத் இராணுவமும் தங்களது வான் பரப்பை மூடியுள்ளது. அதேநேரம், ஈரானால் ஏவப்பட்ட நான்கு ஏவுகணைகளைத் தங்களது நாட்டு வான்பரப்பில் இடைமறித்து அழித்துள்ளதாக ஜோர்டான் இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. வார இறுதியில் நிகழ்ந்த இந்தத் தொடர் இராணுவத் தாக்குதல்களைத் தொடர்ந்து, சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை 3 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ. இ)

# ஈரான் மீது தாக்குதல் நடத்த 1,000 ஏவுகணைகள் தயார்

தெஹ்ரான், ஜூலை 14

ஈரான் என்னைக் கொலை செய்ய முயன்றால் அந்நாட்டின் மீது பயங்கரத் தாக்குதல் நடத்த 1,000 ஏவுகணைகள் தயார்நிலையில் உள்ளன என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பை படுகொலை செய்ய ஈரான் புதுத் திட்டம் வகுத்துள்ளதாக இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதை உறுதிசெய்யும் வகையில் ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் இறுதிச் சடங்கில் பங்கேற்றவர்கள், ட்ரம்ப்பைக் கொல்வோம் என்ற பதாகையுடன் ஊர்வலம் சென்றனர். இதுகுறித்து நியூயோர்க் நாளிதழுக்கு அதிபர் ட்ரம்ப் அளித்த பேட்டியில்,

இஸ்ரேல் எந்தப் புதிய உளவுத் தகவலும் அளிக்கவில்லை. நான் நீண்ட காலமாக ஈரானின் இலக்குப் பட்டியலில் இருக்கிறேன்.

ஈரான் என்னைப் படுகொலை செய்ய முயன்றால், அந்த நாட்டின் மீது 1,000 ஏவுகணைகள் பாய தயார்நிலையில் உள்ளன.

ஈரானுக்கு எதிராக இதற்கு முன் இல்லாத அளவில் மிகக் கடுமையான இராணுவத் தாக்குதல் நடத்த அமெரிக்கா ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது-என்றார். (ச-இ)

# விண்வெளியில் சீனா சாதனை!



பீஜிங், ஜூலை 14

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்க நிறுவனங்களுக்குக் கடுமையான சவால் விடுக்கும் வகையில், சீனா தனது ஏவுகணைச் சோதனையில் மிக முக்கியமான மைல்கல் ஒன்றை எட்டியுள்ளது.

சுற்றுப்பாதை ஏவுதல் சோதனையின் போது, விண்ணில் ஏவப்பட்ட ரொக்கெற்றின் முதலாவது பகுதியை வெற்றிகரமாக மீண்டும் பூமிக்குக் கொண்டுவந்து சீனா வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

தெற்கு சீனாவில் உள்ள ஹாய்னான் தீவிலிருந்து 'லோங் மார்ச் 10பி' என்ற ரொக்கெற் கடந்த வெள்ளிக்கிழமை விண்ணில் ஏவப்பட்டது.

ரொக்கெட்டின் பிரதான பகுதி பிரிந்து சென்ற சில நிமிடங்களிலேயே, அதன் பூஸ்டர் பகுதி கடலில் அமைக்கப்பட்டிருந்த மிதக்கும் தளம் ஒன்றில் செங்குத்தாக வெற்றிகரமாகத் தரை இறங்கியுள்ளது.

ரொக்கெற்றுகளை மறுபயன்பாடு செய்யும் இந்தத் தொழில்நுட்பம், விண்வெளிப் பயணச் செலவுகளைப் பெருமளவு குறைக்கும் என்பதால், இந்த வெற்றி விண்வெளித்துறையில் சீனாவின் பாய்ச்சலை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது என விண்வெளி ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (அ.இ)



# இரவு விடுதியில் தீ விபத்து; 27 பேர் உடல் கருகிப் பலி!

## தாய்லாந்தில் பயங்கரம்

பாங்கொக், ஜூலை 14

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள 'நாலாட் பிராவ்' இரவு விடுதியில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி, 27 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த தாய்லாந்து பிரதமர் அனுதின் சார்ன்விராகுல், 27 பேரின் மரணத்தை உறுதி செய்ததுடன், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

விபத்து நடந்த நேரத்தில் மேடையில் பாடிக்கொண்டிருந்த கலைஞர் ஒருவர் "நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது மேடைக்கு அருகில் இருந்த மின்னிணைப்பில் இருந்து திடீரெனப் புகை வெளியேறி மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அடுத்த சில விநாடிகளில் பயங்கர வெடிப்புச் சத்தத்துடன் தீப்பிழம்புகள் தோன்றி, ஒட்டுமொத்த விடுதியையும் கரும் புகை சூழ்ந்து கொண்டது" எனத் தெரிவித்துள்ளார். தீயணைப்புப் படையினர் நீண்ட போராட்டத்திற்குப் பின்னரே தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ. இ)



# சாம் நெய்ல் மறைவு

நியூயோர்க், ஜூலை 14

ஹொலிவுட்டின் புகழ்பெற்ற திரைப்படங்களான 'ஜுராசிக் பார்க்', ஒஸ்கர் விருது பெற்ற 'தி பியானோ' ஆகியவற்றில் நடித்து உலகப் புகழ்பெற்ற நியூசிலாந்தைச் சேர்ந்த நடிகரான சாம் நெய்ல் தனது 78ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

கடந்த 2022ஆம் ஆண்டில் இரத்தப் புற்றுநோயின் ஒரு வகையான 'ஆஞ்சியோ இம்யூனோ பிளாஸ்டிக் டிசெல் லிம்போமா' என்ற பாதிப்புக்குள்ளாகி தீவிர சிகிச்சை பெற்று வந்த சாம் நெய்ல், சமீபத்தில்தான் தான் புற்றுநோயிலிருந்து முழுமையாகக் குணமடைந்துவிட்டதாக அறிவித்திருந்தார். இந்த நிலையில் அவரது மறைவு உலகெங்கிலும் உள்ள சினிமா ரசிகர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ. இ)

# அமெரிக்கருக்கு எபோலா!

வோஷிங்டன், ஜூலை 14

கொங்கோ நாட்டில் தொண்டு நிறுவனத்தில் பணியாற்றி வந்த அமெரிக்கப் பிரஜை ஒருவருக்கு, மிக ஆபத்தான எபோலா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுமையம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட நபருடன் தொடர்பில் இருந்த உயர் தர ஆபத்துள்ள நபர்களைக் கண்டறியும் பணிகள் கொங்கோ அதிகாரிகளுடன் இணைந்து தீவிரமாக முடுக்கப்பட்டுள் ளன. இதேவேளை, கொங்கோவில் எபோலா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,830 ஆக அதிகரித்துள்ளதுடன், இதுவரை 648 பேர் பலியாகியுள்ளதாக உத்தியோகபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிலையில் எபோலாத் தொற்று கொங்கோவின் தொலைதூரப் பகுதிகள் மற்றும் அண்டை நாடான உகண்டா எல்லைக்குள்ளேயே முடக்கப்பட்டுள்ளதால் ஏனைய நாடுகளின் மக்களுக்கோ அல்லது சர்வதேசப் பயணிகளுக்கோ இதனால் ஏற்படும் ஆபத்து மிக்க் குறைவு எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ. இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு திறமைகளுக்கேற்ப உயர்கல்வி வாய்ப்பு



கொழும்பு,ஜூலை 14

**விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்வரும் காலங்களில் தங்களின் திறமைகளுக்கேற்ப எந்தவொரு துறையிலும், உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னில தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் விசேட தேவையுடைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் விசேட நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் விசேட தேவையுடைய மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் போது மனித நேய மற்றும் சமூக அறிவியல் (கலைத் துறை), மேலாண்மை, பௌதிக அறிவியல் மற்றும் உயிரியல் அறிவியல் ஆகிய நான்கு பிரதான துறைகளுக்கு மாத்திரமே அனுமதிக்கப்பட்டு வந்தனர். இந்த நிலையை தற்போதைய அரசாங்கம் மாற்றி யமைத்துள்ளதோடு, இனிவரும் ஆண்டுகளில் திறமைமிக்க விசேட தேவையுடைய மாணவர்கள் மருத்துவம், பொறியியல் மற்றும் விவசாயம் போன்ற எந்தவொரு உயர்கல்வித் துறையையும் தேர்ந்தெடுத்துக் கற்பதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்க விசேட தேவையுடையோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விசேட சட்ட வரைவு தற்போது தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதோடு, அது மிகக் குறுகிய காலத்தில் நாடாளுமன்றில் நிறைவேற்றப் படவுள்ளது. அதேபோன்று, செவிப்புலன் குறைபாடுடையோரின் தகவல் தொடர்பாடலுக்குப் பயன்படும் சைகை மொழியை, நாட்டின் ஏனைய மொழிகளான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்று சட்டபூர்வமாக்குவதற்கான விசேட சட்டவரைவும் தயாரிக்கப்பட்டு, சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்தவுடன் அதுவும் சட்டமாக்கப்படும்- என்றார்.

(க-இ)

இலங்கை கிரிக்கெட் சபை

## சட்ட ஆலோசனைகளுக்காக மட்டும் 3 ஆண்டுகளில் ரூ.68 கோடி விரயம்!

கொழும்பு,ஜூலை 14

இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் நிர்வாகம், கடந்த 2023ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரையான மூன்று வருட காலப்பகுதியில் மாத்திரம் சட்டக் கட்டணங்கள் மற்றும் அது சார்ந்த விவகாரங்களுக்காக 681மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை வீணடித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

'தி சண்டே டைம்ஸ்' நாளிதழ் வெளியிட்டுள்ள விசேட புலனாய்வு விசாரணை அறிக்கையிலேயே இந்த விவரம் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் கொடுப்பனவுச் சான்றிதழ்களை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில், குறித்த மூன்று வருட காலப்பகுதியில் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு எதிரான வழக்குகள், ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்குகள், வணிகத் தகராறுகள் மற்றும் வரி விவகாரங்கள் தொடர்பான சட்டப் பிரதிநிதித்துவங்களுக்காக ஒட்டுமொத்தமாக 681.17 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வாராந்தச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 14

பன்னாலை சிவபூத வராயர் ஆலயத்தில், சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-4, எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். திருமூலநாயனார் குருபூசையை அடுத்து, மாணவர்களின் கலை நிகழ்வும், திருவாசகப்பிரியன் க. கைலநாதனின் ஞானஒளி என்னும் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும். (க)

மரண அறிவித்தல்

பிறப்பு
30 . 04 . 1937



இறப்பு
11 . 07 . 2026

திருமதி பொடியப்பு திரேசம்மா

பாசையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொடியப்பு திரேசம்மா அவர்கள் 11.07.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலம் சென்ற மடுத்தீஸ் லேனா தம்பதியினரின் அன்பு மகளும், காலம் சென்ற பேபியன்ஸ் பொடியப்பு அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான செவத்தியம்மாவின் அன்பு சகோதரியும், சூசைப்பிள்ளையின் மைத்துனியும், குமார், குமாரி, மஞ்சுளா, றஞ்சன், சிரோமி, மதி மற்றும் காலம் சென்ற காமினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தி, குயின்ரஸ், கியூராஜ்,சரிதா, குமார், பிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், அனோஜன், கெவின், சபீனா, நிக்கொலாய், ஏபிரகாம், றியாஸ்மி, றினைஷா, ஜெனிபர், ஹறிஸ், ஹறிணி ஆகியோரின் பாசமிகு பேத்தியும் மற்றும் டியானின் அன்பு பூட்டியும் ஆவார், மற்றும் மெனிக்கா, வேவி, அன்ரன், கமலா மற்றும் காலம்சென்ற ஆன்சலா ஆகியோர் அன்னாரின் பெறாமக்களும் ஆவர்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (15.07.2026) புதன்கிழமை பி.ப03.00 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 32142)A

இல. 63, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
பாசையூர்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 [illegible]

### 6 தமிழ்க்...

ஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி., அமீர் அலி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி., அதன் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் எம்.பி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஜீவன் தொண்டமான் எம்.பி., தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மற்றும் அதன் உபதலைவர் சுரேந்திரன் குருசாமி ஆகியோர் ஒரே மேடையில் இருந்து நேற்று இந்த அறிவிப்பை விடுத்தனர்.

இதனையொட்டி ஆறு கட்சிகளும் ஒன்று சேர்ந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இன்று சந்தித்த தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தமது சமூகங்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், இணக்கப்பாட்டை உருவாக்கவும் பொதுவான தளமொன்றை உருவாக்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் தமது கொள்கை மற்றும் அரசியல் நிலைப்பாடுகளை தனித்தனியாக பேணுவதற்கும் முன்வைப்பதற்கும் சுதந்திரம் இருப்பதை ஏற்றுக்கொண்ட பிரதிநிதிகள், பொதுவான நலன்கள் காணப்படும் விடயங்களை அடையாளம் கண்டு, சாத்தியமான சந்தர்ப்பங்களில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஒரு பொறிமுறையாக இந்தத் தளம் அமையும் - என்றுள்ளது. (அ-ம-26)

### வாரத்தின்...

இந்தச் சேவை இடம்பெறாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்கிஸையில் இருந்து காங்கேசன்துறை வரையான கடுகதி ரயில்சேவையை வாரத்தில் நான்கு நாள்களுக்கு மட்டுப்படுத்த அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு வெளிப்படுத்தப்பட்ட அதிருப்தியைத் தொடர்ந்தே வாரத்தில் 6 நாள்கள் சேவை இடம்பெறும் என்ற திருத்தப்பட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நல்லூர் திருவிழா அடுத்தமாதம் ஆரம்பிக்கவுள்ள நிலையில், வாரத்தில் ஏழு நாள்களிலும் இந்தச் சேவையை நடத்துவதற்கும் தற்போது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும், இது தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உரிய அதிகாரிகளுக்குச் சில உத்தரவுகளை வழங்கியுள்ளார் எனவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நாமல்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொதுஜன பெரமுனவுக்கு பயம் என்றால் என்னவென்று தெரியாது. 2015ஆம் ஆண்டிலும் எம்மை அச்சுறுத்தினார்கள். ஆனால் எமது பயணம் தொடர்ந்தது. தற்போதும் அவ்வாறு செய்கின்றனர். கைது வேட்டை, இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு, சிறைச்சாலைகளைக் காண்பித்து எம்மை ஒடுக்க பார்க்கின்றனர். நாம் அஞ்சமாட்டோம். நாமலை ஜனாதிபதியாக்கும் பயணம் தொடரும். நாமல்தான் சக்திமிக்க தலைவர் என்பதை நாட்டு மக்கள் ஏற்றுள்ளனர். அதனால்தான் நாமல் குறிவைக்கப்படுகின்றார் - என்றார். (அ-ம)

## பேராசிரியர்...

களைப் பரப்பக்கூடாது என்றும், அவதூறைப் பரப்பியவர்கள் அத்தகைய பதிவுகளை நீக்கவேண்டும் என்றும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைப் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் மீது சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பினர் மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட 14 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
இதுதொடர்பான வழக்கு நேற்றுத் திங்கட்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே, பேராசிரியர் ரகுராம் தொடர்பில் அவதூறுகளைப் பரப்பக்கூடாது என்றும், அவதூறைப் பரப்பியவர்கள் அத்தகைய பதிவுகளை நீக்கவேண்டும் என்றும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அத்துடன் எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்ப கட்டளையிட்ட மன்று, எதிர் மனுதாரர்களின் காரணங்காட்டுதலுக்காக வழக்கு விசாரணையை எதிர்வரும் 27ஆம் திகதிக்குத் தவணையிட்டுள்ளது. (அ-ம-26)

## தமிழ்...

ஈடுபடும் இராணுவத்தினர் மரக்கறிகளை யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தி வருகின்றனர் என்று வலி.வடக்கு மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்தவாரம் நாடாளுமன்றில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் வலி.வடக்கில் இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் 1,661 ஏக்கர் காணி இராணுவத்தினருக்கு தேவை எனவும், அவற்றுக்கான இழப்பீட்டை காணி உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன், வலி.வடக்கில் இராணுவத்தினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவது, தமது சுய தேவைக்கு எனவும் தெரிவித்திருந்தார்.
பிரதி அமைச்சரின் இந்தக் கருத்து முற்றாகத் தவறானதாகும். இராணுவத்தினரால் உற்பத்தி செய்யப்படும் விளை பொருள்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள சந்தைகளுக்கு விற்கப்படுகின்றன. இதனால் இராணுவத்துக்குப் பெருந்தொகை இலாபம் கிடைக்கின்றது.
வலி.வடக்கில் இராணுவத்தினரின் விவசாயப் பண்ணைகளில் உற்பத்தியாகும், விவசாய உற்பத்திகள் பலாலி வீதியில் உரும்பிராய் பகுதியில் உள்ள தனியார் பல்பொருள் அங்காடியில் விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கான வீடியோ ஆதாரம் எம்மிடம் உள்ளது - என்றார். (அ-ம-26)

## இனப்...

இது தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழினப் படுகொலைக்குச் சர்வதேச நீதிகோரி கடந்த ஆண்டு நீதியின் ஓலம் போராட்டம் இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை நீதியின் ஓலம் 2 போராட்டம் இடம்பெறவுள்ளது.
போராட்டத்தின் இறுதி நாளான ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பேரணி இடம்பெறும். எனவே, தமிழர் தாயகத்திலுள்ள அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த மக்கள் பெருமளவில் திரண்டுவந்து இதில் கலந்துகொள்ள வேண்டும் - என்றனர். (அ-ம-26)

## காணாமலாக்கப்...

அதனை ஏற்படுத்துவதற்காக அனைத்து வழிகளிலும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. ஜனாதிபதி அநுர அனைத்து மக்களின் ஆதரவையும் வென்றவர். வரலாற்றில் முதன்முறையாக இந்த ஆட்சிக்கு வடக்கிலிருந்தும் பலத்த ஆதரவு கிடைத்தது. காணி விடுவிப்பு உட்பட பல வழிகளிலும் நல்லிணக்கத்தை எட்டுவதற்கான முயற்சிகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது எனத் தெரியாமல் வடக்கிலும், தெற்கிலும் பெற்றோர் இன்றும் கண்ணீர் சிந்தி வருகின்றனர்.
காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை எமது அரசாங்கம் வினைத்திறனாக முன்னெடுத்து வருகின்றது. இதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது தலா மூன்று பேர் கொண்ட 15 குழுக்கள் அமைக்கப்பட்டு, விசாரணைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இதன் மூலம், நிலுவையிலுள்ள 11 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை இரண்டு வருடங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம். அதேபோன்று, செம்மணி விவகாரத்திலும் உண்மையைக் கண்டறிவதற்குக் அரசாங்கத் தரப்பிலிருந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் - என்றார். (அ-ம-26)

## சீ.வி.கே....

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் மற்றும் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஆகியோருக்குத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளைத் தலைவர் சா.செ.இளங்கோவன், தொகுதிக் கிளையின் செயலாளர் பொ.இராஜேந்திரம் ஆகியோரின் கையொப்பங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் உள்ளதாவது:-
2025ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தங்கள் தலைமையில் நடைபெற்ற வேட்பு மனுத் தாக்கலின்போது ஒன்றுக்கு மேற்பட்ட வேட்புமனுப் படிவங்களைப் பயன்படுத்தி சில வேட்பாளர்களை ஏமாற்றியும், போலிக் கையொப்பமிட்டும் வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பாக உங்கள் வழிகாட்டலிலும் மற்றும் உங்கள் கையொப்பத்திலும் தேர்தல் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தமை சம்பந்தமாக தங்களுடன் பலமுறை நேரடியாகச் சந்தித்து முறைப்பாடு செய்தும், கடிதங்கள் மூலம் தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது மிகுந்த மன வேதனைக்குரிய விடயமாகும்.
2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தலில் வலி.வடக்கு பிரதேச சபைக்கான வேட்பு மனு முறைகேடுகளை தங்களுக்கு அறிக்கையிட்டிருந்தோம். வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிலுள்ள முறைகேடுகளைத் தங்களுக்கு நேரடியாகவும் கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் எந்தவித வெளிப்படையான விசாரணையோ அல்லது நடவடிக்கையோ எடுக்காமல் முறைகேடுகளை வெளிப்படுத்தியவர்களையும், நியாயம் கேட்ட நபர்களையும் ஒதுக்கி கட்சியின் விதிமுறைகளை மீறி காங்கேசன்துறைத் தொகுதிக் கிளைக்கு எதிராக கடந்த மே மாதம் 21ஆம் திகதியன்று போட்டிக் கிளை அமைக்கப்பட்டது. இது காங்கேசன்துறைத் தொகுதிக் கிளை அங்கத்தவர்கள் மீது உளவியல் ரீதியான தாக்குதலை நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முனைப்பாகும்.
கடந்த மே மாதம் 31ஆம் திகதியன்று யாழ்ப்பாண மாவட்ட கிளைத் தெரிவுக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டம் நடத்தப்படுவது தொடர்பாக காங்கேசன்துறைத் தொகுதிக் கிளை உறுப்பினர்களுக்கு எந்தவித அறிவித்தலும் வழங்கப்படவில்லை. இத்தகைய தொடர் முறைகேடு காரணமாக கட்சியின் விதிமுறைகளை மீண்டும் மீண்டும் மீறிய செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இந்தச் செயற்பாடுகள் கட்சியின் யாழ்.மாவட்டத் தொகுதிக் கிளைகள் சார்ந்த அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியலைகளை ஏற்படுத்தியுள்ளது.
தமிழ் இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடனும், தியாக மனப்பான்மையுடனும், நேர்மையாகவும், பக்கச் சார்பின்றியும் உழைத்த தலைவர்களான தந்தை செல்வா, வன்னியசிங்கம், இ.எம்.வி.நாகநாதன் ஆகியோர் உருவாக்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களாகவும் மற்றும் பொதுச்செயலாளர்களாகவும் இராஜவரோதயம், இராசமாணிக்கம், அமிர்தலிங்கம், கதிரவேள் பிள்ளை ஆலாலசுந்தரம், தங்கத்துரை, நீலன் திருச்செல்வம் போன்ற உன்னதமான தலைவர்கள் அமர்ந்த பதவிகளில் தாங்கள் அமர்ந்து கொண்டு சர்வாதிகாரப்போக்குடனும், சுயநலத்துடனும், வெளிப்படைத்தன்மையற்றும் நடந்து மாபெரும் ஜனநாயக கட்சியான தமிழரசுக் கட்சியை அழிவின் விளிம்புக்கு கொண்டு சென்றுள்ளீர்கள் என்பது உறுதி. தங்களின் இந்த வகிபாகத்தின் மூலம் தமிழ்மக்களின் ஏகோபித்த கட்சியாக இருக்கும் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிகளை வகிக்கும் தகுதியினை தாமாகவே இழந்தவர்களாகத் தங்களைக் கருதவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டுள்ளது. இந்தக் காரணங்களுக்காகப் பதில் தலைவர் மற்றும் பதில் பொதுச்செயலாளர் பதவிகளிலிருந்து உடனடியாக ராஜினாமா செய்யுமாறு காங்கேசன்துறைத் தொகுதிக்கிளை சார்பாக கோரிக்கை விடுக்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம-66)

## டெங்கு...

டெங்குத் தொற்று தீவிரம் பெற்றுவரும் நிலையிலேயே டெங்கு பரவும் ஏதுநிலையுள்ள 60 இடங்களை இலக்குவைத்து டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், மருத்துவமனை உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-113)

## பொறியியல்...

உள்ளிட்ட சில பிரச்சினைகளால் வவுனியா சாலையில் பணியாற்றும் பொறியியல் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் கடமையில் ஈடுபடவில்லை. பொறியியல் ஊழியர்கள் பேருந்தின் தரம் தொடர்பான ஆய்வில் ஈடுபட்ட பின்னரே பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த முடியும். எனவே, பொறியியல் ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் இ.போ.ச. பேருந்துகள் நேற்றுச் சேவையில் ஈடுபடவில்லை. முன்னறிவிப்பு இல்லாத இந்த நடவடிக்கையால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். (அ-ம-110)

## தேர்தல்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இது அரசியல் அல்லது தேர்தல் கூட்டணி அல்ல. மாறாக ஒரு பொது மேடையாகும். எமது தாய்மொழி தமிழ், நாம் இலங்கையர்கள். எனவே, இது இனவாதத்துக்கு எதிரான கொள்கைக் கூட்டணியாகும். மாறாக, இதுவொரு இனவாதக் கூட்டணி கிடையாது. சமத்துவமாக, சந்தோஷமாக, அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு வாழ்வது பற்றித்தான் இந்த பொது மேடை எடுத்து இயம்பவுள்ளது.
யுத்தம் முடிவடைந்திருந்தாலும், அது ஏற்படுத்திய அடிப்படை பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. சிங்கள சகோதரர்கள் தொடர்பில் எமக்கு ஒரு புரிதல் உள்ளது. அதேபோல, எம்மைப் பற்றிய புரிதல் அவர்களுக்கும் ஏற்பட வேண்டும். அரசியல் அதிகாரப் பகிர்வு, நிர்வாக அதிகாரப் பகிர்வு, வளப் பகிர்வு, மொழி உரிமை என்பனதான் உண்மையான சமத்துவமாகும். இவையின்றிச் சமத்துவம் பற்றிப் பேசுவதில் எவ்வித பயனும் இல்லை.
நாட்டில் புதிய அரசியலமைப்பு இயற்றப்பட வேண்டும். அதற்குரிய பணிகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன், நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதேபோல, மலையக மக்களுக்கு வாழும் உரிமையோடு, அவர்களின் வாழ்வாதாரத்திற்குரிய காணி உரிமையும் வழங்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கட்டாய உழைப்புப் பொருள்களின் இறக்குமதிக்கு இலங்கை தடை

**கொழும்பு, ஜூலை 14**

**சர்வதேசத் தொழிலாளர் விதிகளுக்கு மதிப்பளித்தும், அமெரிக்காவின் வர்த்தக நெருக்கடிகளைத் தவிர்க்கும் பொருட்டும், கட்டாய உழைப்பைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் எந்தவொரு பொருளையும் இலங்கைக்குள் இறக்குமதி செய் வதற்கு இலங்கை அரசாங்கம் முற்றாகத் தடை விதித்துள்ளது.**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வினால் இதற்கான விசேட வர்த்தமானி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது. கடந்த ஜூலை 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கட்டாய உழைப்பைப் பயன்படுத்தி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அகழ்ந்தெடுக்கப்படும், உற்பத்தி செய்யப்படும் அல்லது தயாரிப்புப் பணிகள் முடிக்கப்படும் எந்தவொரு பொருளையும் இலங்கைக்குள் இறக்குமதி செய்யமுடியாது. இனி வரும் காலங்களில் வெளிநாடுகளில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்யும்போது, அவை கட்டாய உழைப்பைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படவில்லை என்பதை உறுதிப் படுத்தும் ஆவணங்களை இறக்குமதியாளர்கள் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் தற்போது வெளியிட்டுள்ள புதிய ஒழுங்குவிதியின் பிரகாரம், சர்வதேசத் தரப்பாடுகளுக்கு அமைய இலங்கையின் இறக்குமதி மற்றும் சுங்க நடைமுறைகள் இனிவரும் காலங்களில் மிகவும் கடுமையான முறையில் கண்காணிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**காணி விற்பனைக்கு**

யாழ் மருத்துவ பீடத்திற்கு முன்பாகவுள்ள கருவப்புலம் லேனில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 662 4387
077 162 9385

CS 327352A

**மாடுகள் பராமரிக்க வேலையாட்கள் தேவை**

இராஜகாரிய வீதி, மானிப்பாயில் மாடுகளைப் பராமரிப்பதற்கு வேலையாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 969 0123

(cs 618660 (N-1)

## வடக்கு மாகாண மாணவர்களுக்கு விஞ்ஞான வினாடி வினாப் போட்டி!

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில், வட மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கிடையே விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. எதிர்வரும் 24ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் போட்டிகள் நடைபெறும். இந்தப் போட்டிகளில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஒரு அணி மட்டுமே பங்குபற்ற முடியும். ஒவ்வொரு அணியிலும் 5-7 மாணவர்களும் (ஒவ்வொரு சுற்றிலும் 5 பேர் பங்கேற்பர்), அனைத்துத் தர மாணவர்களும் பங்கேற்கலாம்.

உயிரியல் மற்றும் அடிப்படை அறிவியல், ஊட்டச்சத்து, இனப்பெருக்க சுகாதாரம், உளநல நல்வாழ்வு, சாலைப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் கோள சுகாதாரம், குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகள், நினைவாற்றல் மற்றும் கற்றல், செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பம் ஆகிய தலைப்புகளில் போட்டிகள் இடம்பெறும். வெற்றியாளர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் கவர்ச்சிகரமான பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். பங்குபற்றுவோர் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் QR குறியீடு அல்லது Google Formஐ பயன்படுத்தி பதிவு செய்ய முடியும். மேலதிக தகவல்களுக்கு யாழ்ப்பாண மருத்துவச் சங்கத்துடன் (074 111 5766) தொடர்பு கொள்ள முடியும். (க)



## வீதி திறந்துவைப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 14

அளவெட்டி,பத்துப்பனை ,அம்புத்துறை விவசாய வீதி மக்களின் பயன்பாட்டுக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக புனரமைப்பின்றிக் காணப்பட்ட இந்த வீதி பன் முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து புனரமைக்கப்பட்டு நாடாளு மன்ற உறுப்பினர் மருத்துவக் கலாநிதி ஸ்ரீபவானந்த ராஜாவால் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. (அ.41-25)

## நகுலேஸ்வரத்தில் பிரதோசம்!

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பிரதோச விரத உற்சவம் பக்திபூர்வமாக நடைபெற்றது. இதன் போது தேவி சமேதரராக நகுலேஸ்வரப் பெருமான் இடப வாகனத்தில் உள்வீதி உலா வந்தார். (அ-66)

## முத்தமிடுவதில் கின்னஸ் சாதனை

பிரேசில் நாட்டைச் சேர்ந்த தம்பதியர் வெறும் 30 விநாடிகளில் 195 முறை முத்தம் கொடுத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளனர். இந்தத் தம்பதியினர் இருவரும் மருத்துவத்துறையில் பணியாற்றி வருகின்றனர். முறையான பயிற்சியும் தீவிர மன உறுதியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பதை நிரூபிக்கவே இந்த முயற்சியை மேற்கொண்ட தாக தம்பதியினர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர். இந்த முயற்சி, தற்போது அதிகாரபூர்வ கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 • 02 • 1930 | 13 • 07 • 2026 |

### திருமதி இராஜபூபதி பரமேஸ்வரன் (பூமணி)

நவற்கிரி, புத்தூரை பிறப்பிடமாகவும் உரும்பிராய், சிலாபம், தோப்பு (அச்சுவேலி), கொக்குவில் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜபூபதி பரமேஸ்வரன் அவர்கள் 13.07.2026 திங்கட்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவக்கொழுந்து இணையர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற சீனிவாசகம் - செல்லம்மா இணையர்களின் மருமகளும் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமேஸ்வரன் (பொதுச் சுகாதார பரிசோதக மேற்பார்வையாளர் - SPHI) அவர்களின் அன்பு மனைவியும், தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், புவனேஸ்வரி, வேலும்மயிலும் ஆகியோரின் சகோதரியும், சுகன்னியா (கொக்குவில்), வத்சலா (கனடா), தாட்சாயினி (கனடா), சநாதநி (ஆசிரியை - யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), நாகபூஷணன் (உரிமையாளர் - மூங்கில் சூப்பர் சென்ரர் புத்தூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவானந்தன் (ஓய்வு பெற்ற சாலைப் பரிசோதகர்), நவநாதன் (கனடா), சந்திரபாலன் (கனடா), கங்காதரன் (முகாமையாளர் - மூங்கில் சூப்பர் சென்ரர், புத்தூர்), சுகிர்தா (ஆசிரியை - யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், சிகேஷ் (ஆசிரியர் - வவு/ பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயம்), பிரித்திகா (ஆசிரியை - மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி) - நிஷாந்தன், பவ்வியா - கமலேஷ், வர்மன், சேரன் - கீர்த்தனா, ஆரூரன் - காருண்யா, சங்கவி, கவிதரன், பதுமிகா, ஆதித்யன், சாகித்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அவ்யன், மைதிலி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (14.07.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியைக்காக நவற்கிரி நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல.88/3,
மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

**தகவல்: குடும்பத்தினர்.**
077 922 8872 - மகள்
077 742 3612 - மகன்
077 715 3342 - மகள்

CS 321511A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org